**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 115/2013</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **10.11.2025** |
| **பெயர்** | **சம்பத்** |
| **த/பெ** | **மாணிக்கம்** |
| **சாட்சி** | **DW2** |
| **தொழில்** | **துணை வட்டாச்சியர்** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.53 எ.எம்.**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

8. இந்த வழக்கு சொத்து தொடர்பாக முழு விவரம் தெரிந்து தான் சாட்சி கூற வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது முந்தைய வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண் 256/2005 ஹேமச்சந்திர ரெட்டி மற்றும் வேனுகோபால் ரெட்டி அவர்களுக்கு எதிராக ஸ்ரீநிவாச நகர் குடியிருப்போர் நல சங்கம் வழக்கு தாக்கல் செய்தது உண்மையல்ல என்றும் ரட்சகதாஸ் என்பவர் வேனுகோபால் ரெட்டி என்பவருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு என்றால் ஆர்.டி.ஒ வழங்கிய உத்தரவின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். ரட்சகதாஸ், நாராயணன் என்பவரும் பவர் ஏஜென்ட் ஆவார்கள்.

9. Ex–X1–ல் அசல் வழக்கு எண் 256/2005 ல் குமார் என்பவர் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டு அவர் அளவீடு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை எனக்கு வழங்கப்பட்டதா என்றால் தெரியாது.

எனது முந்தைய வாக்குமூலத்தில் 11 ஏக்கர் 49 செண்ட் நிலத்தை வழக்கறிஞர் ஆணையர் அளந்ததாக கூறியுள்ளேன் என்றால் நிலம் அளவீடு செய்ததாக மட்டுமே குறிப்பிட்டுள்ளேன் என்றும் எவ்வளவு பரப்பளவு அளந்தார்கள் என்று குறிப்பிடவில்லை. Ex–X1– உத்தரவை ஆவணங்கள் எதையும் பரிசீலினை செய்யமாமல் செவி வழி பெறப்பட்ட செய்தி மூலமே பிறப்பித்தேன் என்றால் 2012 –ல் தாசில்தாரின் அறிக்கையின் பெயரில் பிறப்பித்த உத்தரவு.

10. எனது முந்தைய சாட்சியில் அசல் வழக்கு எண் 103/2006 மற்றும் அசல் வழக்கு எண் 256/2005 எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன இரண்டு வழக்குகள் குறித்த விவரங்கள் தெரியாமல் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் என்னிடம் உள்ள உத்தரவை வைத்து தான் சாட்சியம் அளிக்கிறேன் **(மேற்சொன்ன கேள்வி அரசு தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்பட்டது).** மேற்சொன்ன இரண்டு வழக்குகளின் கோப்புகளை இந்நீதிமன்றத்திற்கு வர வைத்தால் தான் உண்மை தெரிய வரும் என்றால் ஆர்.டி.ஓ உத்தரவினை வைத்து தான் சாட்சி கூற வந்துள்ளேன்.

11. Ex–X1–ல் ராக்கம்மாள் மற்றும் சந்திராபாயின் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஸ்ரீனிவாச நல சங்கத்தில் மொத்தம் உள்ள 104 வீட்டினையும் அவர்களின் பெயரில் கூட்டுப்பட்டா தாக்கல் ஆகி இருந்த சமயத்தில் விற்பனை செய்துவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. Ex–X1–ல் 3 ம் பக்கத்தில் 1984 கிரையம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பட்டா தவறுதலாக உள்ளதாக மனு அளிக்கப்பட்ட தேதி 27.02.2012 என்றால் Ex–X1–ல் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது

அதனை தாண்டி எனக்கு தெரியாது.

12. வா.சா.ஆ 15–ல் ரரஜேஷ்வரி என்பவர் மனுதாரராக இருந்து அவருக்கும் ஸ்ரீநிவாச நகர் மக்கள் நல சங்கத்தில் உள்ள 18 நபர்களுக்கும் பட்டா வழங்க கோரி நீதிபேராணை மனு எண் 27061/2012 என தாக்கல் செய்த வழக்கில் ஆர்.டி.ஓ வும் தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். ஸ்ரீநிவாச நகர் மக்கள் நல சங்கம் பதிவு பெற்ற சங்கம் என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன சங்கத்தில் இரண்டிற்கும் மேற்பட்ட சங்கம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. Ex–X1–ல் குறிப்பிட்ட தேதிக்கு பிறகு தான் வா.சா.ஆ–15 தாக்கல் ஆகி இருந்த மனுவில் உத்தரவு வெளியாகியது என்றால் எனக்கு தெரியாது.

13. வா.சா.ஆ 15 ஆவணத்தில் வழங்கிய உத்தரவின் மூலம் மனுதாரருக்கு பட்டா வழங்க கோரி உத்தரவு இடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்கூறிய நீதிப்பேராணை மனுவில் நான் தரப்பினராக இருந்தும் தற்போது தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்.டி.ஓ பிறப்பிதத உத்தரவு குறித்து மட்டுமே எனக்கு தெரியுமே தவிர வழக்கு தொடர்பாக பிற சங்கதிகள் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாது என்றால் வேறு யாருக்கு தெரியும் என்றால் சம்பந்தப்பட்ட சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கு தெரியும். இந்த வழக்கு தொடர்பாக எனக்கு எந்த சங்கதிகளும் தெரியாமல் இருக்கும் பட்சத்தில் நா்ன இவ்வழக்கிற்கு சாட்சியம அளிக்க தகுதி அற்றவர் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.29.p.m.**